கையில் கலந்து கொள்ளவேண்டுமென்று தாங்கள் கேட்டுக் கொள்ளவேண்டும். முடிந்தால் இன்றே இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு மற்ற அலுவல்களை எடுத்துக் கொள்வது நலம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொன்னது போல ஆளுங்கட்சியைப் பொறுத்த வரையிலும் அதே கருத்தைத்தான் கொண்டு இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளுவதற்குப் பதிலாக அதை நாளைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் தீர்மானித்துள்ளார்கள். அதற்குக் காரணம் மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் மட்டுமல்ல. இந்த சட்டமன்றப் பேரவை, மேலவையிலே இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சுமார் 23 பேர்கள் மறைந்திருக்கிறார்கள். ஆகவே 23 பேர்கள் சட்ட பேரவை, மேலவை உறுப்பினர்கள் மறைவு குறித்தும் இரங்கல் தீர்மானம் கொண்டுவர இருக்கிறோம். மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் மறைவு குறித்து மட்டும் இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து மற்ற 23 பேர்களையும் மறந்து விட்டால் நியாய மாக இருக்காது. ஆகவே மறைந்த அத்தனை உறுப்பினர் களுக்கும் இரங்கல் தீர்மானம் கொண்டு வருகின்ற வகையில் நாளைக்கு பேரவை நிகழ்ச்சிகளிலே இடம் பெறும் என்று கூறிக் கொண்டு, இதை அரசியல் பிரச்சினை ஆக்க வேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

2. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு— '7—7—1977 ஆம் தேதி நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழு எடுத்த முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விவரம் உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்'.

(ஆ) அலுவல் ஆய்வுக்குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு—தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 193 (1) வது

அறிவிப்புகள்

விதியின் கீழ், பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன்—

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்.
2. மாண்புமிகு முதல் அமைச்சர்.
3. மாண்புமிகு பேரவை முன்னவர்.
4. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
6. திரு. மு. கருணாநிதி.
7. திரு. க. அன்பழகன்.
8. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
9. திரு. என். சங்கரய்யா.
10. திரு. ஜே. ஜேம்ஸ்.
11. திரு. சோ. அழகர்சாமி.
12. திரு. ரா. மார்க்கபந்து.
13. திரு கே. கந்தசாமி.
14. திரு. எம். அப்துல் லத்தீப்.
15. திரு. பி. கே. மூக்கையா தேவர்.
16. திரு. துரை. கோவிந்தராசன்.

பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

(1) ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(இ) சட்ட முன்வடிவுகளின் நகல் தமிழில் வழங்கப்படாதது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத்தின் நடவடிக்கைகள்,